உத்தமர் காந்தி ஊராட்சி விருது – 2007–2008 ஆம் ஆண்டிற்கான சிறந்த 15 ஊராட்சிகளுக்கு விருது வழங்குதல்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா2) துறை

அரசாணை(ப) எண்:- 854 நாள்: 19.11.2008

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை(பல்வகை) எண் 111, ஊரக வளாச்சி மற்றும் ஊராட்சித்துறை நாள்:- 5.9.2008
2. அரசாணை(நிலை) எண் 772, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை நாள் :- 14.12.2007
3. அரசாணை(பல்வகை) எண் 570, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை நாள் : - 28.9.2007.
4. அரசு கடித எண் 33806/சி2/07 நாள் :- 16.10.2007.
5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடித எண் 83757/07/பராஅ 1.3 நாள் 17.11.2008.

**ஆணை**

பார்வை ஒன்றில் கண்டுள்ள அரசாணையில் கிராமத்தின் ஒட்டு மொத்த முன்னேற்றத்திற்காக ஊராட்சியால் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் அங்கீகரிக்கும் வகையில், மாநிலத்தில் 15 சிறந்த கிராமங்களைத் தேர்ந்தெடுத்து அதற்கு ‘சிறந்த ஊராட்சி’ என பரிசு வழங்கப்படும் என்று ஆணையிடப்பட்டது. இத்திட்டத்தில் தெரிவு பெறும் ஊராட்சிக்கு ஒரு நற்சான்றிதழ், ஒரு கேடயம் மற்றும் ரூபாய் ஐந்து லட்சத்திற்கான வெகுமதியும் பரிசாக வழங்கப்படும் என்றும் மேலும், இத்திட்டத்தில் தெரிவு பெறும் ஊராட்சித் தலைவர்களுக்கு ஒரு நற்சான்றிதழ் மற்றும் ஒரு பதக்கம் வழங்கப்படும் என்றும், இப்பரிசு வழங்கும் திட்டத்திற்கு “உத்தமர் காந்தி ஊராட்சி விருது” என்று பெயரிட்டு அழைக்கவும் ஆணையிடப்பட்டது.

2. 2007–08 ஆம் ஆண்டிற்கான “உத்தமர் காந்தி ஊராட்சி விருது” வழங்க முன்மொழிவுகள் அனுப்புமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் பார்வை நான்கில் கண்டுள்ள அரசு கடிதத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெறப்பட்ட 84 முன்மொழிவுகளை பரிசீலனை செய்ய ஒரு குழு அமைத்திருந்தார். மேற்படி குழு, 84 முன்மொழிவுகளையும் பரிசீலனை செய்து அவற்றிலிருந்து தல ஆய்வுக்கென 43 கிராம ஊராட்சிகளை தேர்வு செய்தது. மேற்படி, 43 ஊராட்சிகளை தல ஆய்வு செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்கக கூடுதல் இயக்குநர் மற்றும் இணை இயக்குநரை கொண்ட மூன்று குழுக்கள் அமைக்கப்பட்டது. மேற்படி குழுக்கள், 43 ஊராட்சிகளையும் தல ஆய்வு செய்து தங்களது விரிவான அறிக்கையினை அளித்தது. மேற்கண்டவாறு பரிசீலிக்கப்பட்ட 43 கிராம ஊராட்சிகளிலிருந்து தகுதியின் அடிப்படையில் 15 கிராம ஊராட்சிகளுக்கு 2007–08 ஆம் ஆண்டிற்கான “உத்தமர் காந்தி ஊராட்சி விருது” வழங்க உரிய ஆணைகள் பிறப்பிக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரைகளை ஏற்று, தகுதியின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் 43 ஊராட்சிகளில் கீழ்க்கண்ட 15 ஊராட்சிகளுக்கு

2007–08 ஆம் ஆண்டிற்கான "உத்தமர் காந்தி ஊராட்சி விருது" வழங்கலாம் என அரசு ஆணையிடுகிறது :-

| வ.எண். | மாவட்டம் | ஊராட்சி ஒன்றியம் | கிராம ஊராட்சி |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திருநெல்வேலி | கீழப்பாவூர் | கீழவெள்ளக்கால் |
| 2. | விருதுநகர் | சாத்தூர் | பெத்துரெட்டிப்பட்டி |
| 3. | இராமநாதபுரம் | மண்டபம் | தாமரைக்குளம் |
| 4. | நாகப்பட்டினம் | கீழையூர் | விழுந்தமாவடி |
| 5. | திருவாரூர் | கோட்டூர் | பள்ளிவர்த்தி |
| 6. | திருநெல்வேலி | இராதாபுரம் | இடையன்குடி |
| 7. | தஞ்சாவூர் | திருவிடைமருதூர் | சீனிவாசநல்லூர் |
| 8. | இராமநாதபுரம் | முதுகுளத்தூர் | திருவரங்கம் |
| 9. | கரூர் | அரவக்குறிச்சி | ஈசநத்தம் |
| 10. | நீலகிரி | உதகமண்டலம் | தும்மனட்டி |
| 11. | தேனி | உத்தமபாளையம் | இராமசாமிநாயக்கன் பட்டி |
| 12. | நாமக்கல் | நாமக்கல் | முதலைப்பட்டி |
| 13. | திண்டுக்கல் | திண்டுக்கல் | ம.மு.கோவிலூர் |
| 14. | ஈரோடு | பவானி | மயிலம்பாடி |
| 15. | சிவகங்கை | காளையார்கோயில் | காட்டேந்தல் சுக்காணூரணி |

5. இந்த விருதிற்கான செலவினம் கீழ்க்கண்ட கணக்குத்தலைப்பின் கீழ் பற்று வைக்கலாம்:-

" 2515 – ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள்– 102 சமுதாய வளர்ச்சி– பத்தாவது ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II மாநிலத்திட்டங்கள்– KJ தூய்மையான ஊராட்சி முகாம்– 09 உதவி மானியங்கள்– 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள்"
(DPC 2515-00-102-KJ-0939)

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி,**
அரசு முதன்மைச் செயலாளர்.